11

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு - பகுதி II (வெளிவாரி) - 2004/05
## (ஒக்ரோபர்/நவம்பர் – 2006)

## TL 301 – ஈழத்து இலக்கிய வரலாறு

நேரம்: 3 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. சங்க இலக்கிய நூல்களில் இடம் பெற்றுள்ள ஈழத்துப் பூதந்தேவனாரை ஈழத்துப் புலவர் என்று கூறலாமா? ஆராய்க.

2. கி.பி.17 ம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடக்கம் கி.பி.18 ம் நூற்றாண்டு வரையான ஈழத்து இலக்கிய வரலாற்றின் முக்கிய செல் நெறிகள் யாவை? விளக்குக.

3. அ) ஈழத்தில் 19ம் நூற்றாண்டில் வசனநடை வளர்ச்சி பெற்றமைக்கான காரணங்கள் யாவை? சுருக்கமாகக் குறிப்பிடுக.
   ஆ) வசனம் எந்த எந்தத் துறைகளில் எத்தகைய தன்மைகள் பெற்று வளர்ச்சியடைந்தது? உதாரணங்களுடன் விளக்குக.

4. அ) ஈழத்தில் 19ம் நூற்றாண்டில் நவீன இலக்கியம் தோற்றம் பெற்ற சூழல் எத்தகையது? விளக்குக.
   ஆ) அக்காலகட்ட நவீன இலக்கிய முயற்சிகள் யாவை? விபரிக்குக.

5. "ஈழத்தின் ஆரம்பகாலச் சிறுகதைகள் புராண, இதிகாச, வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன" என்று கூறுவது பொருந்துமா? ஆராய்க.

6. அ) 'புகலிடஇலக்கியம்' என்றால் என்ன? சுருக்கமாகத் தெளிவு படுத்துக.
   ஆ) ஈழத்துப் புகலிடநாவல் வளர்ச்சி எத்தகையது என்பதனை ஆராய்க.

7. ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் 'மஹாகவி'யினதும் நீலாவணனதும் முக்கியத்துவம் பற்றி விளக்குக.

8. பின்வருவனவற்றுள் எவையேனும் இரு விடயங்களுக்கு விளக்கக்குறிப்பு வரைக.
   அ) ஞானப்பள்ளு
   ஆ) தந்தைவிடுதூது
   இ) சி.வை.தாமோதரம்பிள்ளையும் நூற் பதிப்பு முயற்சியும்
   ஈ) கைலாசபதியும் நவீன விமர்சனமும்
   உ) பேராசிரியர் கணபதிப்பிள்ளையும் நவீன நாடகமும்